1972 சனவரி 25]

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட முறையில் யாராவது வீடு கட்ட வாங்கிய பணத்தை வேறு வழியில் பயன்படுத்தாமல் இருக்க அரசு கண்காணித்து வருகிறது. தவறாக யாராவது செய்தார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரிந் தால், உடனடியாக அந்தப் பணத்தைத் திரும்ப வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 58 ஒற்றிவைக்கப் படுகிறது.

*Temples in Bhavani Taluk*

* 59 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the number of temples under the administration of Hindu Religious and Charitable Endowments Department in Bhavani and Gobichettipalayam taluks in Coimbatore district at present; and

(b) the number of acres of dry, garden and wet lands separately owned by each of the above institutions?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :**

(அ) பவானி தாலுக்கா—70;

கோபிச்செட்டி பாளையம் தாலுக்கா—117.

(இ) விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டிருக் கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்த விவர அறிக்கை யிலே பவானி தாலுகாவிலே இந்தக் கோவில்களுக்குச் சொந்த மாக, 70 கோவில்களுக்குச் சொந்தமாக நஞ்சை 710 ஏக்கராகவும், தோட்ட பூமியாக 37 ஏக்கராவும் ,வறண்ட பூமியாகச் சுமார் 623 ஏக்கராவும் இருப்பதாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல கோபியிலே நஞ்சை நிலம் 425 ஏக்கரா, தோட்ட நிலம் 31 ஏக்கரா, வறண்ட பூமி 160 ஏக்கரா இருப்பதாகக் கொடுக்சப்பட் டிருக்கிறது. எங்களுடைய பவானி, கோபி வட்டத்திலே இப்படி நஞ்சை பூமி குறைந்தது 1,000-ல் இருந்து 1,500 ஏக்கரா இருப்ப தாகவும், இவைகள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன என்ற கணக்கு இருக்கிறது. இவைகளில் இருந்து சுமார் 11½ லட்ச ரூபாய் வருமானம் கிடைக்க வேண்டும். அந்த அளவிற்குக் கிடைக்கிறதா என்றால் இல்லை. அந்த அளவிற்குக் கிடைப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, பட்டிய லில் கண்டுள்ள நிலங்களில் கோவிலுக்குச் சொந்தமான நிலங்க ளாக இருந்தால், கோவில்களின் ஆளுகைக்கு உட்படாமல் இருந் தவைகளை இன்றைக்கு அறநிலைய ஆணை நிர்வாகத்தின் கீழ்

---

@ 211–215ம் பக்கங்களில் மூன்றாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, பொதுவாக கோவில் நிலங்களிலிருந்து வருமானம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே அதை அதிகப்படுத்துவதற்கு ஒரு கமிட்டி அமைக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, கோவில் நிலங்களில் இருந்து வருகின்ற வருமானத்தை அதிகப்படுத்த அற நிலையத் துறை தக்க முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகின்றது. குத்தகை கொடுக்க வேண்டிய குத்தகைதாரர்கள் பேரிலே ஏராள மான வசூல் நிலுவை பாக்கி இருக்கிறது. இவற்றை வசூல் செய்ய வும் குத்தகையை அதிகப்படுத்துவதற்கான முயற்சியை மேற் கொண்டு வருகிறது.

**திரு. ஈ. எம். நடராசன்:** தலைவரவர்களே, பவானி வட்டத்திலே பல கோவில்களுக்கு டிரஸ்டிகள் இன்னும் நியமனம் செய்யப்பட வில்லை. அதற்கான ஏற்பாடுகளை அரசு விரைவில் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அறநிலைய ஆணைத் துறையின்கீழ் வந்து இருக்கிற எல்லாக் கோவில்களுக்கும் அறங் காவலர்களை நியமித்து இருக்கிறோம். அப்படி ஏதாவது நியமிக்கப் படாமல் விட்டுப் போயிருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தகவல் கொடுத்தால் அவைகளுக்கு அறங்காவலர்களை நியமிப்ப தற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

**திரு. எம். சுரேந்திரன்:** கோவில் நிலங்களையெல்லாம் அரசாங் கமே எடுத்துக் கொண்டு கோவில்களைப் பராமரிக்கின்ற செலவு களை அரசாங்கமே அளிப்பது நல்லது அல்லவா என்பதைப் பற்றி அரசு யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, இது நல்ல யோசனைதான். ஆனால் காலம் கனிய வேண்டும்.

*Idols unearthed in Tiruvathigai*

* 60 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of idols were unearthed in Tiruvathigai near Cuddalore about 9th November 1971; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இல்லை. 11—10—71-ல் திரு வதிகை ஸ்ரீ வீரட்டீஸ்வரர் கோயில் அலங்கார மண்டபத்தின் தளம் அப்புறப்படுத்தப்பட்டபொழுது இரு வெண்கல நடராஜர் விக்ரகங்கள் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டன.